[1973 ஆகஸ்ட் 14

"விதி 41 (3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. கவன ஈர்ப்பு

(அ) 1973, ஜூன் திங்களில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரையோர கிராமங்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

THIRU N. DENNIS: Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the sea erosion near Thengapattinam in Kanyakumari District during Junt 1973 causing damage to the dwelling houses.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, 1973 ஜூன் ஜூலைத் திங்களில் ஏற்பட்ட கடலரிப்பு காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தின் சில கடற்கரையோரக் கிராமங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டன என்றும், இராமன்துறை, முள்ளூர்துறை, தேங்காபட்டினம், எரமாந்துறை, பூத்துறை, புத்தந்துறை ஆகிய கிராமங்களில் 22 வீடுகளும் 39 குடிசைகளும் கடலரிப்பு காரணமாக சேதமடைந்தன என்றும் அரசுக்கு அறிக்கைகள் வந்துள்ளன. சேதத்தின் மதிப்பு ரூ. 59,650 ஆகும். மேற்சொன்னவற்றைத் தவிர தேங்காப்பட்டினம் கிராமத்தில் காய்க்கும் 50 தென்னை மரங்கள் வேரோடு சாய்ந்தன. இருப்பினும், கடலரிப்பு காரணமாக உயிர்ச்சேதமோ, கால்நடைச் சேதமோ ஏற்படவில்லை.

கடலரிப்பைத் தடுப்பதற்காக, மணல் மூட்டைகளை அடுக்கி வைக்கத் தேவையான காலி சாக்குப் பைகளை பொதுப்பணித்துறை வழங்குகிறது என்றும், பாதிக்கப்பட்ட கிராமங்களின் கடல் அரிப்பைத் தடுக்க தற்காலிகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்து கொடுப்பதற்காக வருவாய்த்துறைக்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகளையும் அத்துறை வழங்குகிறது என்றும் தலைமைப் பொறியாளர் (கட்டிடங்கள்) தெரிவித்துள்ளார். கடலரிப்பு ஏற்படும் காலங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கல், அவர்களை அண்டையிலுள்ள பகுதிகளில் குடியமர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை வருவாய்த் துறை மேற்கொள்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் கடலரிப்புப் பிரச்சினை தொடர்ந்து நடக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். மே முதல் ஜூலை வரையுள்ள கால அளவில் வழக்கமாகக் கடலரிப்பு ஏற்படுகிறது. அக்காலங்களில் கடல் அலைகளின் உயரம் 20 அடிக்கும் அதிகமாகிறது. கடல் கொந்தளிப்புக் காலங்களில் கடலுக்கு அருகில் உள்ள நிலங்கள் கடல் நீரால் சூழப்படுகின்றன. கடலரிப்பு ஏற்படும்பொழுது, கடற்கரைக்கு

அருகில் உள்ள வீடுகள், குடிசைகள், மரங்கள் முதலியன உயர்ந்துவரும் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்படுகின்றன. தமிழ்நாட்டின் அரபிக் கடல் கடற்கரை நெடுகவும் அமைந்துள்ள கன்னியாகுமரி மாவட்ட கிராமங்கள், கடலரிப்பு காரணமாக அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன.

அரசு 1970–71 ஆம் ஆண்டில் ரூ. 4·60 லட்சம் மொத்தச் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மிடலாந்துறை, பள்ளத்துறை, மேலமணக்குடி மற்றும் எரமாந்துறை ஆகிய கிராமங்களில் பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றியுள்ளது. மிடலாந்துறையில் நிறைவேற்றப்பட்ட பாதுகாப்புப் பணிகள் பின்னர் அலை எழுச்சி ஏற்பட்டதன் காரணமாக இரு முறை சேதமடைந்துவிட்டன. சேதமடைந்த பாதுகாப்புச் சுவர்களைப் பழுது பார்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டு வரும் கடலரிப்புக்கு நிலையானதொரு தீர்வு காணும் பொருட்டு, இம்மாவட்டத்தின் அரபிக் கடற்கரை நெடுகவும் நிலையாகவே கடற்சுவர் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக பொதுப்பணித் துறை தயாரித்த தொடக்க மதிப்பீடு, ரூ. 3·51 கோடி மொத்தச் செலவில், தமிழ்நாட்டில் அரபிக் கடற்கரை நெடுகவும் 14·5 கிலோ மீட்டர் நீளத்திற்கு நிலையாகவே கடற்சுவர் கட்ட வகை செய்கிறது. இம்மாவட்டத்தில் ஏற்படும் கடலரிப்பின் கடுமையையும், ஏற்படும் செலவின் அளவையும் கருத்திற்கொண்டு, அரசு, இந்த மதிப்பீட்டை இந்திய அரசின் பாசன மின்சக்தி அமைச்சகத்தின் ஏற்பளிப்புக்காக அனுப்பியுள்ளது. மேற்சொன்ன திட்டத்திற்கு இந்திய அரசின் ஏற்பளிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, எப்பொழுது இது நடைமுறையில் வரும் ? ஆண்டுதோறும் அங்கே கடல் அரிப்பினால் பல வீடுகள், சில கிராமங்களே பலியாகிவிடுகின்றன. ஆகவே, துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அதைத் தான் நான் படிக்கும்பொழுதே சொன்னேன். இந்திய அரசின் ஒப்பளிப்புக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது வந்தவுடன் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) நிலக்கரிப் பற்றுக்குறை காரணமாக சிமெண்ட் உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதும், பலர் வேலையிழந்திருப்பதும் குறித்து

Dr. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Industries to a matter of urgent publio importance, namely, the acute coal shortage resulting in the steep fall in production of cement which in turn has thrown out of employment a number of persons.